## ஒன்றிய அரசை கண்டித்து

# மனிதநேய மக்கள் கட்சி ஆர்ப்பாட்டம்



ஒன்றிய அரசை கண்டித்து மதுரை தமுக்கம் மைதானம் அருகே மனிதநேய மக்கள் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**மதுரை, அக்.7:** மனித நேய மக்கள் கட்சி சார்பில் ஒன்றிய அரசின் உபா சட்டம், என்ஐஏவிற்கு எதிராககண்டன ஆர்ப்பாட்டம் மதுரையில் நடந்தது.

ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (உபா) மற்றும் என்ஐஏ அமைப்பை கண்டித்தும், தமிழக அரசில் ஆளுநரின் தலையீட்டை கண்டித்தும் மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் பொதுச்செயலாளரும், எம்எல்ஏவுமான அப்துல்சமது தலைமையில் மதுரை தமுக்கம்மைதானம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது.

இதில் எம்பிக்கள் சு.வெங்கடேசன் (மதுரை), மாணிக்கம் தாகூர்(விருதுநகர்), சுப்புராயன், எம்எல்ஏ பூமிநாதன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். போலீசார் அனுமதி மறுத்த நிலையில், அனுமதியை மீறி ஆர்ப்பாட்டம் நடந்தது.

இதில் சு.வெங்கடேசன் எம்பி பேசுகையில், உபா, என்ஐஏ, ஆளுநர் தலையீடு ஆகியவை இஸ்லாமிய சமூகத்திற்கு எதிரானது மட்டுமல்ல, இந்திய ஜனநாயகத்திற்கு எதிரானது, அரசியலமைப்புக்கு எதிரானது. ஒவ்வொரு இந்து, கிறிஸ்தவம், இஸ்லாமியர்களும் இதற்கு எதிராக போராட வேண்டும். பாஜ இதுபோன்ற சட்டங்கள் மூலம் வெறுப்பு அரசியலை விதைக்கிறது, சர்வாதிகாரத்திற்கும், ஜனநாயகத்திற்கும் எதிரான இந்த போரில் அனைவரும் இணைய வேண்டும் என்றார்.

விருதுநகர் எம்பி மாணிக்கம் தாகூர் பேசுகையில், ஆர்எஸ்எஸ்சின் ஆட்சியாக பாஜ ஆட்சி செயல்பட்டு வருகிறது. சிபிஐ வருமான வரித்துறை போன்று என்ஐஏவையும் ஒன்றிய அரசு பழிவாங்கும் அமைப்பாக பயன்படுத்துகிறது, உள்துறையை வைத்து சிறுபான்மை மக்களை பார்த்து அனைவரும் அச்சமடைய வைக்கும் சூழ்ச்சி நடைபெறுகிறது, திமுக ஆட்சிக்கு எதிராக தமிழக ஆளுநரை பேசவைக்கிறது. பன்முகத்தன்மை கொண்ட காந்தியின் இந்தியாவை ஒரே எண்ணம் கொண்ட கோட்சேவின் அரசாக மாற்ற முயற்சிக்கும் அமித்ஷாவின் கனவு நிறைவேறாது என்றார்.